(முழுப் பதிப்புரிமையுடையது
(All Rights Reserved)

வளவாளர் - S. மோகன்
0779685514

AL - AZHAR VIDYALAYA - KALMUNAI
தரம் – 05
வழிகாட்டல் கருத்தரங்கு
2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

வினாத்தாள் - I

60 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.ikeou.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. கட்டத்தின் உள்ளே உள்ள சித்திரத்துக்குப் பெருமளவில் **ஒத்ததாக** வரையப்பட்டுள்ள சித்திரம் எது?





(1)





(2)




(3)

2. அடைப்பினுள் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்குப் **பொருந்தாத** உருவைத் தெரிவு செய்க.






(1)




(2)



(3)

3. ஆசிரியர் வரைந்த சித்திரத்திற்கும் மாணவன் வரைந்த சித்திரத்திற்கும் இடையிலான வேறுபாடுகளின் எண்ணிக்கை யாது?



ஆசிரியர் வரைந்த சித்திரம்




மாணவன் வரைந்த சித்திரம்


(1) 03

(2) 04


(3) 05

4. முதலில் தரப்பட்டுள்ள உருவைத் தரப்பட்டுள்ள நான்கு பகுதிகளில் மூன்றைப் பயன்படுத்தி அமைக்க முடியும் பயன்படுத்த **முடியாத** பகுதி எது?







A



B




C



D


(1) A (2) B (3) C

5. முதலாவதாக தரப்பட்டுள்ள படத்துடன் **கருத்து நிறைந்த** வகையில் தொடர்பு கொண்டிருக்கும் படத்தைத் தெரிவு செய்க.





(1)





(2)




(3)

6. கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பாருங்கள்.
இந்த மூன்று உருவத்துண்டுகளையும் **அதே விதத்தில்** பயன்படுத்தி அமைக்கப்பட்ட தனி உரு எது?






(1)




(2)




(3)

7. இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய எந்த உருவத் துண்டை இணைக்க வேண்டும்?




(1)




(2)



(3)



8. இரு வட்டங்களும் A எனும் இடத்தில் இருந்து பின்வருமாறு சுழல்கின்றன. நிழற்றப்படாத வட்டமானது தானிருக்கும் இடத்தில் இருந்து கடிகார சுழற்சியில் இரு இடங்கள் முன்னோக்கிச் செல்ல நிழற்றப்பட்ட வட்டமானது கடிகார சுழற்சிக்கு எதிர்த் திசையில் ஒரு இடம் முன்னோக்கிச் செல்கின்றது. இதற்கமைவாக இரு வட்டங்களும் மீண்டும் ஒன்றாக எந்த ஆங்கில எழுத்தில் சந்திக்கும்?



(1) G

(2) C

(3) A

9. வரிசை ஒன்றில் லவினேஸ் முன்னால் இருந்து நான்காவது இடத்திலும் டிவானேஸ் பின்னால் இருந்து மூன்றாவது இடத்திலும் அருகருகே நின்றனர். அவர்களுக்கிடையே நபர் ஒருவர் வந்து நின்றதும் அவர்களின் இடங்கள் மாறின எனின் தற்போது வரிசையில் நிற்போரின் எண்ணிக்கை யாது?

(1) 08 (2) 06 (3) 07

10. குமாரின் கடையிலுள்ள தராசின் படம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இத் தராசின் A தட்டின் நிறை 150 கிராமாகவும் B தட்டின் நிறை 125 கிராமாகவும் காணப்பட்டது. வாடிக்கையாளர் ஒருவர் 500 கிராம் சீனியினை வாங்கும் போது குமார் 500 கிராம் படிக்கல்லை B தட்டில் வைத்து சீனியினை A தட்டில் வைத்து தராசின் முள் சமமாக வருமாறு நிறுத்தால் வாடிக்கையாளர் பெறும் சீனியின் நிறை யாதாக இருக்கும்?




(1) 525 கிராம்

(2) 500 கிராம்

(3) 475 கிராம்

11. இந்த உருவில் உள்ள A , B ஆகிய கட்டங்களுக்குப் பொருத்தமான எண்கள் **முறையே**



(1) 2 , 4
(2) 1 , 3
(3) 2 , 1

12. கோவர்ஷா 3 மாம்பழங்களையும் 2 தோடம்பழங்களையும் அல்லது 3 தோடம்பழங்களை மட்டும் வாங்கக்கூடிய பணம் வைத்திருந்தாள். அவள் ஒரு தோடம்பழத்தை மட்டும் வாங்குவாளாயின் எத்தனை மாம்பழங்களை வாங்க முடியும்?

(1) 09 (2) 04 (3) 06

13. ரூபாய் 100.00 பெறுமதியான புத்தகம் ஒன்றை அதன் விலையின் $\frac{1}{5}$ பங்கு கழிவுடன் வாங்கிய யோசன் புத்தகத்தின் பெறுமதியின் $\frac{1}{4}$ பங்கு பெறுமதியுடைய இறுவட்டு ஒன்றையும் விலைக்கு வாங்கினான் எனின் அவன் புத்தகத்தையும் இறுவட்டையும் வாங்குவதற்கு செலவிட்ட மொத்தப் பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 125.00 (2) ரூபாய் 80.00 (3) ரூபாய் 105.00

- பின்வரும் தரவினை அடிப்படையாகக் கொண்டு **14 , 15** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
- யதுசனின் வீடு அவனது நண்பன் சிவாஷின் வீட்டிற்கு தெற்கே 70 மீற்றர் தூரத்தில் உள்ளது.
- கோயில் யதுசனின் வீட்டிற்கு மேற்கே 80 மீற்றர் தூரத்தில் உள்ளது.
- பாடசாலை யதுசனின் வீட்டிற்கு தெற்கே 130 மீற்றர் தூரத்தில் உள்ளது.

14. சிவாஷின் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான மிகக் கிட்டிய தூரம் யாது?

(1) 280 மீற்றர் (2) 150 மீற்றர் (3) 200 மீற்றர்

15. பாடசாலையில் இருந்து கோயில் என்ன திசையில் அமைந்துள்ளது?

(1) வடக்கு (2) வடமேற்கு (3) தென்கிழக்கு

16. ஆவல் - 370 , மாதவி - 516 , கனவு - 248 எனின், 206 குறிக்கும் சொல் யாது?

(1) கவிதை (2) தகவு (3) கல்வி

17. ஒரு வகுப்பு மாணவிகள் ஐவருள் டிகாசினி கிரிசாயிலும் உயரமானவள் அல்ல. ஹனிஷ்ஹா அக்ஷைனியிலும் பார்க்க குட்டையானவள். ஆனால் சாயினியிலும் பார்க்க உயரமானவள். சாயினியும் கிரிசாயியும் ஒரே உயரமுடையவர்கள். இவர்களுள் மிக உயரமானவர் யார்?

(1) அக்ஷைனி (2) டிகாசினி (3) கிரிசாயி

18. AB x BA = 1729 ஆயின் B யின் பெறுமானமாக அமைவது?

(1) 3 (2) 9 (3) 6


19. 240 மீற்றர் சுற்றளவைக் கொண்ட முக்கோண வடிவக் காணித்துண்டொன்றைச் சுற்றி 10 மீற்றர் இடைவெளியில் சீமெந்துத் தூண்கள் நடத் தீர்மானிக்கப்பட்டது. எனின் தேவையான சீமெந்துத் தூண்களின் எண்ணிக்கை யாது?

(1) 27 (2) 24 (3) 21

20. நிதூரிகனின் கைக்கடிகாரம் மணித்தியாலத்திற்கு 3 நிமிடம் பிந்தி ஓடியது. ஒமேஷனின் கைக்கடிகாரம் மணித்தியாலத்திற்கு 5 நிமிடம் முந்தி ஓடியது. குறித்த ஒரு தினம் காலை 6.00 மணிக்கு இருவரது கடிகாரங்களும் சரியான நேரத்தைக் காட்டின. அதே தினம் காலை 11.00 மணிக்கு நிதூரிகனினதும் ஒமேஷனினதும் கடிகாரங்கள் காட்டும் நேரங்கள் முறையே ?

(1) மு.ப 11.20 , மு.ப 10.45 (2) மு.ப 10.45 , மு.ப 11.25 (3) மு.ப 11.00 , மு.ப 11.25

21.



அருகிலுள்ள சில்லுகள் இரண்டும் தொடுகையில் உள்ளன. பெரிய சில்லு ஒரு முறை சுழலும் போது சிறிய சில்லு நான்கு முறை சுழலும். அம்புக்குறி காட்டும் திசையில் பெரிய சில்லு சுழலும் போது சிறிய சில்லின் எப்புள்ளி பெரிய சில்லின் H என்ற புள்ளியை முதல் தொடும்?

(1) N (2) P (3) J


22. கடிகாரம் ஒன்று 5 மணிக்கு 5 மணிகளை ஒலிக்க 8 செக்கன் நேரம் எடுத்துக் கொண்டது எனின் அக்கடிகாரம் 10 மணிக்கு 10 மணிகளை ஒலிக்க எடுத்துக் கொள்ளும் நேரம் யாது?

(1) 16 செக்கன் (2) 20 செக்கன் (3) 18 செக்கன்

23. கிருஸ்ணாவின் தற்போதைய வயது அவரது மகனின் தற்போதைய வயதின் நான்கு மடங்காகும். நான்கு வருடங்களுக்கு முன்னர் கிருஸ்ணாவின் வயது அவரது மகனின் வயதின் ஏழு மடங்காக இருந்தது. கிருஸ்ணாவின் தற்போதைய வயது என்ன?

(1) 32 (2) 40 (3) 34

24. வட்ட வடிவமான புகையிரதப் பாதை ஒன்றின் வரிப்படம் அருகிலே காட்டப்பட்டுள்ளது. இதில் A , B எனும் இரண்டு புகைவண்டிப் பெட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எஞ்சின் பக்கப்பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புகையிரதப் பாதையிலுள்ள பாலத்தில் எஞ்சின் மாத்திரமே பயணம் செய்யும். எஞ்சினின் சாரதி பக்கப் பாதையில் இரு புகைவண்டிப் பெட்டிகளையும் எஞ்சினைப் பயன்படுத்தி அருகருகே நிறுத்த வேண்டும் இதற்காக முதலில் அவர் எந்த புகைவண்டிப் பெட்டியை பக்கப் பாதையில் நிறுத்துவார்?




(1) A

(2) B

(3) கூறமுடியாது

25. வட்டவடிவான ஓட்டப் பாதை ஒன்று உருவில் தரப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகள் அதன் A என்னும் இடத்திலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு, எதிர் எதிர்த் திசையில் செல்கின்றனர். ஒருவரது கதி மற்றவரது கதியின் மூன்று மடங்கு ஆகும். அவர் அம்புக்குறி காட்டும் திசையில் ஓடுகின்றார். அவர்கள் இருவரும் அடுத்து சந்திக்கக் கூடிய இடமாக அமையும் இடம் எது?

(1) A
(2) B
(3) C



26. இங்கு தரப்பட்டுள்ள ஆறு எழுத்துக்களையும் தமிழ் நெடுங்கணக்கு வரிசைப்படி ஒழுங்குபடுத்துவதற்காக எத்தனை எழுத்துக்களின் இடங்களை மாற்றுதல் வேண்டும்?


க்	ட்	த்	ற்	ப்	ச்

(1) 06 (2) 03 (3) 04

27. கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் காட்போட் அட்டை இரண்டில் வரையப்பட்டுள்ளன.




உரு - 1




உரு - 2

இரண்டு உருக்களினதும் P அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு உரு - 2 இன் மேல் உரு - 1 ஐ வைப்பதனால் கிடைக்கும் உரு யாது?

(1) 

(2) 

(3) 


28. 30 நாள்கள் உள்ள ஒரு மாதத்தில் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அம்மாதத்தின் 16ஆம் 29ஆம் திகதிகளில் அமையும் நாள்கள் முறையே

(1) வெள்ளி , சனி (2) வியாழன் , வெள்ளி (3) வெள்ளி , வியாழன்

29. 

இந்த ஐந்து அட்டைகளிலும் உள்ள எண்களை ஏறு வரிசையில் எழுதும் போது நான்காவதாக வரும் எண்ணைக் குறிக்கும் உரு எது?

(1) 
(2) 
(3) 

30. 


சைக்கிள் பயணி ஒருவர் ஆரம்ப இடத்திலிருந்து வடக்குத் திசையில் பயணத்தை ஆரம்பித்து அதே இடத்தை வந்தடைந்த விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன் படி அவரது பயணம் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வடக்குத் திசையில் கூடிய தூரம் பயணித்துள்ளார்.

(2) மொத்தத் தூரத்தில் அரைவாசித் தூரம் தெற்குத் திசையாக உள்ளது.

(3) மேற்குத் திசையைக் காட்டிலும் கிழக்குத் திசையில் அதிக தூரம் பயணித்துள்ளார்.

www.kalvi.lk


31. 

அருகிலுள்ள சதுர வடிவம் பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A பகுதியின் சுற்றளவானது B பகுதி ஒன்றின் சுற்றளவின் இரு மடங்காகும்.

(2) வடிவத்தின் மொத்தப் பரப்பளவில் A பகுதியின் பரப்பளவானது அரைவாசியிலும் குறைவாகும்.

(3) A பகுதியின் பரப்பளவானது B பகுதி ஒன்றின் பரப்பளவின் மூன்று மடங்காகும்.

32. 


இந்த வடிவத்தை ஒரு கனவுருவாக மாற்றுவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை சிறிய சதுர முகிகளை நகர்த்தி வைக்க வேண்டும்?

(1) 02 (2) 03 (3) 06


33. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு வரிசையில் வைத்து எரிபொருள் வழங்கப்பட்டது. இரு ஆண்களுக்கு வழங்கப்பட்டதும் ஒரு பெண்ணுக்கு என்ற ஒழுங்கின் பிரகாரம் வரிசையில் நிற்போருக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. ஒரு நபருக்கு எரிபொருள் நிரப்ப 2 நிமிடம் எடுத்தது. மு.ப 7.00 இற்கு பெண்கள் வரிசையில் நின்ற முதலாவது நபர் எரிபொருள் பெறும் முறை வந்தது. எனின் ஆண்கள் வரிசையில் நின்ற ஐந்தாவது நபருக்கு எத்தனை மணிக்கு எரிபொருளைப் பெறும் முறை கிடைத்திருக்கும்?


(1) மு.ப 7.10 (2) மு.ப 7.08 (3) மு.ப 7.06

34. கோலத்தில் அடுத்துவரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


.....

(1) 

(2) 

(3) 

35. மேசை ஒன்றில் இருபது ரூபாய், ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் நாணயத்தாள்கள் ஐந்து வீதம் வைக்கப்பட்டிருந்தன. ஒரு வகையிலிருந்து இரண்டு நாணயத்தாள்களையும் இன்னொரு வகையிலிருந்து மூன்று நாணயத்தாள்களையும் அடுத்த வகையிலிருந்து நான்கு நாணயத்தாள்களையும் எடுத்துப் பெறக்கூடிய தொகையாக அமைவது?

(1) ரூபாய் 430.00 (2) ரூபாய் 610.00 (3) ரூபாய் 630.00

36. ஆசிரியர் வகுப்பிலுள்ள 21 மாணவர்களுக்கும் அவர்களது பரீட்சை சுட்டெண்களாக 010 தொடக்கம் 030 வரையுள்ள எண்களைக் கொடுக்க விரும்பினார். எந்தவொரு மாணவனும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 3 ஆக வரத்தக்க எந்தவொரு எண்ணையும் ஏற்க விரும்பவில்லை. அத்தகைய எண்கள் எத்தனை மாணவர்களுக்கு கிடைக்கக் கூடும்?

(1) 02 (2) 03 (3) 04

www.ikedu.lk

37. ஒருவர் திரைப்படம் ஒன்று பார்ப்பதற்காகச் சென்ற வேளையில் இடம்பெற்ற சில நிகழ்வுகள் ஒழுங்கு இன்றி தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தும் போது **1 , 3 , 5** ஆகிய இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

* A - நுளைவுச்சீட்டைப் பெறல்.
* B - ஆள் வரிசையில் இடம்பிடித்து நிற்றல்.
* C - படமாளிகையினுள் செல்லல்
* D - நுழைவுச் சீட்டுக்குப் பணம் கொடுத்தல்.
* E - இருக்கையில் அமருதல்.
* F - இருக்கை காட்டுநரால் வழிகாட்டப்படல்.

(1) A , C , E

(2) C , D . E

(3) C , D , F

38.




இப் படத்தின் படி பிள்ளைகள் விளையாடும் நேரமாக அமைவது.

(1) பி.ப 1.00

(2) பி.ப 8.00

(3) பி.ப 4.30

➢ பின்வரும் உருவையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு **39 , 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



➢ மூன்று வட்டங்களைக் கொண்டு இந்த உரு அமைக்கப்பட்டுள்ளது.

➢ ஒவ்வொரு வட்டமும் 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 1 தொடக்கம் 21 வரையான எண்கள் ஒரு வட்டத்தில் 7 என்ற ஒழுங்கில் வரிசைக்கிரமமாக குறிக்கப்பட்டுள்ளன.

➢ அம்புக்குறி காட்டும் பக்கத்தில் வட்டமாக வட்டங்கள் அசையும் பொழுது ஒரு அசைவில் ஒரு எண் அருகிலுள்ள இடத்திற்கு இடம் மாறும். உதாரணம் - 1வது வட்டம் அம்புக்குறி காட்டும் பக்கத்திற்கு ஒரு முறை அசையும் பொழுது B நிரலில் உள்ள 20 A நிரலுக்கு இடம் மாறும்.

39. மூன்று வட்டங்களும் தமக்குரிய பக்கத்தை நோக்கி ஒரு முறை அசையும் பொழுது ஆங்கில எழுத்து B யினால் குறித்துக்காட்டப்படும் நிரலில் மேலிருந்து கீழாகக் காணப்படும் எண்கள்

(1) 20, 3, 12 (2) 12, 2, 21 (3) 21, 2, 12

40. ஆரம்ப நிலையில் மூன்று வட்டங்களும் தமக்குரிய பக்கத்தை நோக்கி மூன்று முறை அசையும் பொழுது ஆங்கில எழுத்து A யினால் குறித்துக்காட்டப்படும் நிரலில் காணப்படும் எண்களின் கூட்டுத்தொகை

(1) 41 (2) 31 (3) 34

www.ikeou.lk